செ.வெ.எண்:28 நாள்:7.9.2019

# தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு மருத்துவ முகாமினை, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் துவக்கி வைத்தார்.

---

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு மருத்துவ முகாம் துவக்க நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (7.9.2019) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் கலந்து கொண்டு, சிறப்பு மருத்துவ முகாமினை துவக்கி வைத்தார். மேலும், கர்ப்பினி தாய்மார்களுக்கு அம்மா ஊட்டசத்து பெட்டகம், பிறந்த குழந்தைகளுக்கு அம்மா பரிசு பெட்டகம் வழங்கி முகாமினை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் விளாத்திக்குளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர்.செ.ராஜூ அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்த அற்புதமான திட்டம், சிறப்பு மருத்துவ முகாம் திட்டமாகும். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவை முதன்மை மாநிலமாக மாற்றும் வகையில் பல திட்டங்களை செயல்படுத்தினார்கள். மேலும், தேர்தலின் போது, சொன்ன அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றினார்கள். மேலும், தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கிட கல்வித்துறையை முன்னேற்றினால்தான் மற்ற அனைத்து துறைகளும் முன்னேறும் என்ற அடிப்படையில் இந்தியாவில் எந்த அரசும் செய்திடாத வகையில் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து கல்விக்காக பல திட்டங்களை செயல்படுத்தினார்கள். மேலும், தமிழக மக்கள் ஆரோக்கிய வாழ்வு வாழ வேண்டும் என்ற அடிப்படையில் வசிதிப்படைத்த மக்களுக்கு கிடைக்கும் அதே மருத்துவம் ஏழை, எளிய மக்களுக்கும் கிடைத்திடும் வகையில் மாண்புமிகு முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தினை கொண்டுவந்து செயல்படுத்தினார்கள். மேலும், கர்ப்பினி தாய்மார்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையினை ரூ.18 ஆயிரமாக உயர்த்தி வழங்கினார்கள். அம்மா வழியில் செயல்படும் தமிழக அரசு குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே அம்மா ஊட்டசத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்கள். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் புதிதாக மருத்துவ கல்லூரிகளையும் தொடங்கி வைத்தார்கள். கோவில்பட்டியில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் செவிலியர் பயிற்சி கல்லூரி வரைவில் தொடங்கப்படவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுபயணம் மேற்கொண்டு தமிழகத்தில் மருத்துவ துறையில் பல்வேறு முன்னேற்றங்களை ஏற்படுத்தும் வகையிலான திட்நட்களை பார்வையிட்டுள்ளார்கள். குறிப்பாக ஏர் ஆம்புலன்ஸ் திட்டம் செயல்படுத்துவது குறித்து பார்த்துள்ளார்கள். விரைவில் இத்திட்டம் தமிழகத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் மேலும், கால்நடை அபிவிருத்தி. பால் உற்பத்தி அதிகரித்தல் தொடர்பான திட்டங்களையும் பார்வையிட்டுள்ளார்கள்.

தமிழக அரசு கருவறை முதல் கல்லறை வரையிலான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது சமுதாய வளைகாப்பு திட்டம், மகப்பேறு சஞ்சீவ் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை தாயும், சேயும் நலமுடன் இருக்கும் வகையில் சிந்தித்து செயல்படுத்தும் அரசாக தமிழக அரசு உள்ளது. கயத்தாறு பகுதிக்கென தனி வட்டம் உருவாக்கப்பட்டு அதற்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகிறது. கயத்தாறு தாலுகாவாக உயர்த்தப்பட்டுள்ளதால் இங்குள்ள மருத்துவமனையும் தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும். மேலும் போக்குவரத்துத்துறையின் மூலம் பல் டிப்போவும் இங்கு உருவாக்கப்படும். மருத்துவ முகாமில் தேசிய ஊட்டசத்து திட்ட மாதத்தின் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உறுதிமொழி ஏற்கப்பட்டது. மேலும் இங்கு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் குழந்தைகளுடன் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. உடல் ஆரோக்கியமாக இருக்க நல்ல சத்தான உணவுகளை சாப்பிட வேண்டும். சத்தான உணவுகள் எது என்பதை பொது மக்கள் அறிந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் தேசிய ஊட்டசத்து மாதம் கடைபிடிக்கப்படுகிறது. எனவே, மருத்துவர்கள் கூறும் அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை பின்பற்றி நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் என்பதை மனதில் கொண்டு அனைவரும் வாழ வேண்டும் என மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.விஜயா, கோவில்பட்டி துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.போஸ்கோராஜா, கோவில்பட்டி வட்டாட்சியர் திரு.பாஸ்கரன், சுகாதாரத்துறை துணை இயக்குநர்கள் மரு.க.சுந்தரலிங்கம், மரு.யமுனா, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.கணேஷ் பாண்டியன், முக்கிய பிரமுகர்கள் திரு.கப்பல் ராமசாமி, திரு.வினோபாஜி, திரு.ரமேஷ், கயத்தார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியை திருமதி.பேச்சியம்மாள், வட்டார மருத்துவ அலுவலர் மரு.திலகவதி மற்றும் வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள், சுகாதார ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.